சேலம் மாவட்ட சலவைத்தொழிலாளர் சங்கத்தின் மனு

* 161 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சலவைத் தொழிலாளருக்கு ஒரு பலநோக்குக் கூட்டுறவு சங்கம் ஆரம்பிப்பது பற்றி சேலம் ஜில்லா சலவைத் தொழிலாளர் சங்கம் மூலம் 24-7-1963 தேதியிட்டு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடம் விண்ணப்பம் கொடுக்கப்பட்டதா ?

(இ) அதன்மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்டச் சலவையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 100 அங்கத்தினர்களுக்கு மட்டுமே நிதி உதவி செய்வதற்கு வகை செய்யப்பட்டதென்றும், அச் சங்கத்தில் ஏற்கெனவே 120 அங்கத்தினர்கள் இருப்பதால் இனிமேல் எந்த அங்கத்தினரையும் சேர்த்துக் கொள்ள இயலாது என்றும் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சலவைத் தொழிலாளர் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள்

* 162 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்தில் சலவைத் தொழிலாளர் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மாவட்டவாரியாக எத்தனை உள்ளன ?

(இ) ஒவ்வொரு சங்கத்திலும் உள்ள அங்கத்தினர்கள் எத்தனை பேர் ?

(உ) எந்தெந்தத் துறைகளில் இவைகளுக்கு உதவியளிக்கப் படுகிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ), (இ) & (உ) சபை முன் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : இந்தச் சலவைத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்களுக்கு என்னென்ன ஏற்பாடுகள், என்னென்ன வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அதில் ஒவ்வொரு சங்கத்திற்கும் வேறுபாடு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தற்பொழுது ஜில்லாவுக்கு ஒன்று என்று 12 சங்கங்கள் வைக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு 4, 5 விதமாக உதவி அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

---

[a] Printed as Appendix II on pages 519—520.

5th March 1965]

1. Interest-free share capital loan.

2. Interest-free loan of Rs. 100 each for 100 members, for the purchase of equipment such as brass, iron bars, tables, boilers, etc.

3. Interest-bearing loan of Rs. 50 each for 100 members for the purchase of soda ash, etc.

4. Subsidy to meet the cost of establishment and contingency charges of Rs. 50 per mensem for one year.

5. Free service of a Senior Inspector of Co-operative Societies to work as Secretary of the Society.

திரு. சா. கணேசன் : சேலம் ஜில்லா சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 120, 125 மெம்பர்கள் இருக்கிறார்கள், அதற்கு மேற்கொண்டு மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ள இயலாமல் இருப்பதினால், மேற்கொண்டு சேர்க்கப்படவில்லை என்று மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். ஒரு ஜில்லா சொசைடியில் சுமார் 120 பேர்கள்தான் சேர்த்துக்கொள்ள முடியும், அதற்கு மேல் சேர்த்துக் கொள்ள முடியாது என்று இருப்பது எவ்வளவு வசதிக் குறைவானது அல்லது பயனற்றது என்பதை உணர்ந்து, நிறைய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்வதற்கு, சேர விரும்புபவர்களை யெல்லாம் சேர்ப்பதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : 100-க்கும் மேலாகவே சேர்த்திருக்கிறார்கள். இப்பொழுது இந்தச் சங்கத்தில் 220, 230 மெம்பர்கள் இருக்கிறார்கள். 100 பேர்களுக்குத்தான் சர்க்கார் உதவி அளிக்க வசதி இருக்கிறது. மற்றவர்கள் பொது நோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ற முறையில் அவர்களுக்கு வேண்டிய தேவைகளை அந்த சங்கத்தின் பொறுப்பிலே ஏற்று, அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் கொடுக்கும் உதவி 100 மெம்பர்களுக்குத்தான் என்ற அளவில் இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அடுத்த ஆண்டி லிருந்து 100 என்பது 400 ஆக, அதிகமாகச் சேர்க்கப்படவிருக் கிறது. 400 மெம்பர்கள் சேர்க்கலாம் என்று இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சலவைத் தொழிலாளர்களுக்கு செய்யவேண்டிய உதவி அவர்கள் பின்தங்கிய நிலையில் இருக் கிறார்கள், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைவிட, சமுதாயத்தில் பொது ஆரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் முன்னிட்டு அவசியமானது. இந்தச் சொசைட்டிகளின் மூலமாக இன்னும் ஆரோக்கியமான முறையில் துணிகளைச் சலவை செய்ய, மெகனைஸ்டு லாண்ட்ரி அமைப்பதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதைப் போலச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் நடப்பது என்று சொன்னால், போகப் போக அதற்கு வேண்டிய 'லேடஸ்டு எகுப்மெண்டு' வாங்கிக் கொடுப்பதற்கு வசதி இருக்க வேண்டும் என்பது தான் நோக்கம்.

[5th March 1965

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் சலவையாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ரூபாய் 15,500 செலவில் ஒரு 'ட்ரை கிளீனிங் பிளாண்டு' அமைப்பதற்கு 'ப்ரபோஸல்' போட்டு அனுப்பியிருக்கிறோம். 50 சத விகிதம் சப்சிடியாகவும், 50 சத விகிதம் லோனாகவும் கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டம் என்ன நிலைமையில் இருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அது பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : சலவைத் தொழிலாளர்களுக்கு இது போன்ற சொஸைடி அமைத்துக் கொடுப்பது மிகவும் உதவியாக இருக்கிறது. இம்மாதிரி ஒவ்வொரு முனிசிபல் நகரத்திலும் ஒரு சொசைடி அமைத்துக் கொடுப்பது பற்றி இந்த அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது ஜில்லாவுக்கு ஒன்றாக இப்பொழுது இருக்கிறது என்று சொன்னேன். போகப் போக கிளைகள் வைக்க வேண்டும். அதற்குத் தகுந்த நிலை ஏற்படும்பொழுது அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கூட்டுறவுச் சங்கங்களில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு சட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். சலவைத் தொழிலாளர்கள் சங்கத்தில் அங்கத்தினர்கள் சேர்க்க முடியாது என்று சொல்லுகிறார்கள். மற்ற கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்கள் சேர்க்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்களே ? ஏன் இந்த அடிப்படை வித்தியாசம் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த, 100 மெம்பர்களுக்கு வேண்டிய உதவி செய்வது என்ற முறையில்தான் இப்பொழுது இருக்கிறது என்று சொன்னேன்.

9-00 a.m.

திரு. சா. கணேசன் : இந்த ஜில்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளேயே அதனுடைய கிளைச் சங்கங்கள்—சில நகரங்களுக்குத் தேவை இருக்கலாம், சில நகரங்களுக்குத் தேவையில்லாமல் இருக்கலாம் என்ற முறையில் தேவைப்படும் அளவுக்கு அமைத்துக் கொள்ளலாம் என்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அப்படிச் செய்யப்படாவிட்டால், அதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்பொழுது அதற்கான தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், சலவைத் தொழிலாளர் சலவை செய்ய அவசியமான உப்பு வகைகள் கிடைப்பதில் சிரமம்

5th March 1965]

இருப்பதால் அவர்கள் கள்ள மார்க்கெட்டில் வாங்கவேண்டியிருப்பதால், அவர்களுக்குக் கொடுக்கும் உதவியை ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு வேண்டிய பொருளாகக் கொடுக்கும் யோசனை உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : சங்கம் மூலம் வாங்கிக் கொடுக்கப்படுகிறது . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சலவையாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சோடா வகைகளை வாங்கி அவர்களுக்கு வினியோகம் செய்தோம். அது சோடா கிடைக்காத காலத்தில் அவர்கள் சங்கங்களில் வாங்கிக் கொண்டார்கள். பிறகு வெளியில் கிடைக்க ஆரம்பித்ததும், கூட்டுறவு சங்கங்களில் வாங்குவதை நிறுத்தி விட்டார்கள், அதனால் நமக்கு கஷ்டம் ஏற்பட்டது. வெளியிலே விலை அதிகமாகப் போய்விட்டபோது, கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருந்து சோடா கிடைப்பதை விட கூட்டுறவு சங்கங்களில் விலை அதிகமாக இருக்கிறது என்கிறார்களே அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் துறையிலே வியாபாரம் செய்கிறவர்கள், தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென்று பல வழிகளைக் கையாள்வார்கள். ஒன்று, ஏதாவது நியாய விலைக்கு விற்க வேண்டும் என்று ஏதாவது ஒன்றைச் செய்தால், அந்தச் சமயத்தில் தனியார் அந்தப் பொருளின் விலையை இறக்கி விற்று செய்திருக்கின்ற ஏற்பாடு குலைந்து விடவேண்டும் என்ற நோக்கம் இருக்கலாம். பிறகு அந்த விலை ஏறிக் கொண்டு போவதைப் பார்த்திருக்கிறோம். எது என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் அப்படிப்பட்ட நிலவரங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, எங்களுடைய சேலம் மாவட்டம் ஒரு பெரிய மாவட்டம். ஆகவே, வட சேலத்தில் ஒரு சங்கம் அமைக்க வேண்டும் என்று அனுமதி கேட்டால் அரசாங்கம் அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அப்ளை பண்ணச் சொல்லுங்கள், பார்க்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சர்க்கார் நடத்துகிற கூட்டுறவுச் சங்கத் தொழிலை அடிக்க தனியார் துறையில் உள்ளவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள் என்றார்கள். தனியார் துறையில் உள்ளவர்கள் முதலை அழித்தா வியாபாரம் செய்வார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினருடைய கேள்வி புரியவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சார், கூட்டுறவுச் சங்கத்தில் செய்யும் வியாபாரத்தைக் குலைக்க தனியார் முயற்சி எடுக்கிருர்கள் என்று அமைச்சர் சொன்ஞர்கள். ஆனல், ஒரு வியாபாரி தாம் போட்டிருக்கிற முதலை அழித்துக் கொண்டு வியாபாரம் செய்யப் புகுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினருக்கு வியாபாரத்தினுடைய முறைகள் சரியாகத் தெரியாது என்று நினைக்கிறேன். வியாபாரம் செய்வதில் முதலிலே நஷ்டத்திற்கு விற்றுவிட்டு, பிறகு 'மானுபொலி' அடைந்து ஏராளமாக லாபம் சம்பாதிப்பது ஒரு முறை. பொருளாதாரத் துறையில், குறைந்த விலைக்கு விற்று, மற்றவர்களுடைய காம்பெடிஷன், போட்டியைத் தவிர்க்க, நஷ்டத்திற்குக்கூட விற்கலாம். இதையெல்லாம் நாம் உலகத்திலே பார்க்கிருேம்.

கனம் சபாநாயகர் : சிலபேர் சகுனத் தடைக்கு மூக்கை வெட்டுவார்கள் என்று சொல்லுவார்களே, அது போல. (சிரிப்பு)

திரு. து. ப. அழகமுத்து : இந்தச் சலவைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்வதற்கு ஷேர் காபிடல் முழுவதும் லோனுகக் கொடுக்கப்படுகிறதா அல்லது பகுதி லோனு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : அதைப் பற்றிய விவரம் சொன்னேன். இனிஷியல் ஸ்டேஜில் மெம்பராகச் சேர்கிருர்கள். அதற்குப் பிறகு விதிப் பிரகாரம் ஷேர் காபிடல் மற்றவைகள் கொடுக்கப்படுகின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சலவையாளர்கள் மாநிலம் பூராவும் உபயோகிப்பது கழுதைகள். அதைவிட்டு வேறு வாகன வசதி செய்து கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. க. ர. நல்லசிவம் : கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அளவில் குறிப்பிட்ட தொகைதான் என்று அனுமதி கொடுக்கப்படுகிறதா அல்லது ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இவ்வளவுதான் என்று கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: சார், நான் முன்பு பதில் சொன்னபோது கனம் அங்கத்தினர் சபையில் இல்லாததால் இந்தக் கேள்வியைக் கேட்கிருர்கள். இதில் முக்கிய அம்சம், ஜில்லாவுக்கு ஒரு சங்கம், ஒரு சங்கத்தில் நூறு அங்கத்தினர்களுக்கு உதவி என்று செய்கிருேம். நான்காவது திட்டத்தில் ஒரு சங்கத்தில் 400 பேர் வரைக்கும் அங்கத்தினர்களாகச் சேர்க்க உத்தேசம்

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.